## 5

# தேவதூதர்களைக் குறித்து கிறிஸ்தவர்களின் நம்பிக்கை என்ன

லூக்கா புத்தகம் பின்வரும் வார்த்தைகளுடன் துவங்குகிறது: "... நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை ..." சத்தியங்களுக்குள் கிறிஸ்தவர்கள் "முழு நிச்சயமாய் நம்பின சங்கதிகளில்" தேவதூதர்கள் இருக்கின்றனர் என்ற உண்மையும் அடங்கும். *நாம் தேவதூதர்கள் இருப்பதை விசுவாசிக்கிறோம்.* ஏன்? இந்த தொடர் கட்டுரைகளில் நாம் விவாதித்த மற்ற சத்தியங்களை என்ன காரணத்துக்காக விசுவாசித்தோமோ அதே காரணங்கள்தான்: அவர்கள் இருப்பதை திருமறை போதிக்கிறது.

தேவ தூதர்களின் பிரதான பங்களிப்பு திருமறையில் காணப்படுகிறது. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் விழுந்துபோன பின்பு வழியைக் காவல் காக்க "கேரூபின்கள்" (Heb.: *kerubim*) என்றழைக்கப்படுகிற தேவ தூதர்கள் நியமிக்கப்பட்டார்கள் (ஆதியாகமம் 3:24). சோதோமின் மீது வந்த அழிவின் போது லோத்தையும் அவரது குடும்பத்தையும் விடுதலையாக்கும் பொருட்டு தூதர்கள் தங்கள் கைகளினால் பிடித்துக் கொண்டுபோய் விட்டார்கள் (ஆதியாகமம் 19:1, 16). நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பதிலே தேவ தூதர்கள் சம்பந்தப் பட்டிருந்தார்கள் (நடபடிகள் 7:53; கலாத்தியர் 3:19; எபிரெயர் 2:2). சிங்கங்கள் தானியேலைத் தின்று விடாதபடி அவைகளின் வாய்களை ஒரு தூதன் மூடிப்போட்டார் (தானியேல் 6:22). ஒரு தேவ தூதன் யோவான் ஸ்நானகனின் பிறப்பைக் குறித்து அறிவித்தான் (லூக்கா 1:11). தேவ தூதர்கள் இயேசுவின் பிறப்பு குறித்து யோசேப்புக்கும் (மத்தேயு 1:20), மரியாளுக்கும் (லூக்கா 1:26-38), முன்னறிவித்தார்கள், மற்றும் மேய்ப்பர்களுக்கு அவருடைய பிறப்பு குறித்து அறிவித்தார்கள் (லூக்கா 2:9-14), இயேசு சோதிக்கப்பட்ட பிறகு, தேவதூதர்கள் அவருக்கு பணிவிடை செய்தார்கள் (மத்தேயு 4:11); கெத்சமனேயில் அவர் ஜெபம் செய்தபின், ஒரு தேவ தூதன் வந்து அவரைத் தேற்றினான் (லுக்கா 22:43). லாசரு மரித்த பொழுது, அவனை தேவதூதர்கள் ஆபிரகாம் மடியில் கொண்டுபோய் விட்டார்கள் (லூக்கா 16:22). கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தபோது, ஒரு தேவதூதன் கல்லைப் புரட்டிப் போட்டு அங்கே இருந்த தூதர்கள் அவருடைய உயிர்த்தெழுந்ததை அறிவித்தார்கள் (மத்தேயு 28:2, 5, 6; யோவான் 20:12). சிறைச்சாலையிலிருந்து பேதுருவையும் யோவானையும் விடுதலையாக்கி, சிறையிலிருந்து பேருவை வெளியே கொண்டுவந்து, தேவனுக்கு மகிமையைச் செலுத்தத் தவறிய ஏரோதுவை கொன்று போட்டு, பவுல் பயணம் பண்ணின கப்பல் உடைந்து நொருங்குண்டு போகும் நிலையிலிருந்து போது அவர்களில் ஒருவனுக்கும் பிராணச் சேதம் வராது என்று தைரியஞ் சொல்லி தேவதூதர்கள்

*உதவினார்கள் (நடபடிகள் 5:19; 12:7, 23; 27:23, 24). இயேசு மறுபடியும் வரும்போது தேவ தூதரோடு வருவார் (மத்தேயு 25:31; 2 தெசலோனிக்கேயர் 1:7). பரலோகத்தில், தேவதூதர் தேவனைச் சூழ்ந்திருந்து, கர்த்தரைத் தொடர்ந்து துதிக்கிறார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 7:11, 12).*

*தேவதூதர்களைக் குறித்து கிறிஸ்தவர்கள் விசுவாசிக்க வேண்டியது என்ன? தேவதூதர்களைக் குறித்து பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிற யாவற்றையும் உண்மையென ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. தேவதூதர்கள் உருண்டு திரண்ட சரீரமும் தெய்வீக சிறகுகள் உள்ளவர்களுமாய் வெளியில் மக்களைச் சுற்றிப் பறந்து கொண்டிருக்கிற சிறு குழந்தைகளைப் போன்றவர்களா? அவர்கள் தங்கள் தலைக்குமேலே ஒரு வட்டத்தைக் கொண்டவர்களா, சிறகுகளை உடையவர்களா, மேகங்கள் மேல் அமர்ந்து இருக்கிறார்களா, மற்றும் அவர்கள் சுரமண்டத்தை வாசித்துக் கொண்டிருக்கிறார்களா? மக்கள் மரித்துப் போன பிறகு தேவதூதர் ஆகிறார்களா? மக்களுக்கு உதவி செய்யும்படி இன்று மனிதத் தோற்றத்துடன் வந்து உதவி செய்கிறார்களா? இப்படி பிரசித்தமாய் பேசப்படும் கருத்துக்கள், எதையுமே திருமறை உறுதிபடுத்துவதில்லை.*

*நான்கு கேள்விகளுக்கு நாம் பதில் காண்பதன் மூலம், தேவதூதர்களைக் குறித்து திருமறை என்ன சொல்லுகிறது என்பதைக் கண்டு பிடிப்போம்.*

## தேவதூதர்கள் என்பது என்ன?

*திருமறையில் "தூதன்" என்பதற்குப் பயன்படுத்தும் வார்த்தைகள்* (Heb.: *malak*; Gk.: *angelos*) *என்றால் "செய்தி கொண்டு வருபவன்" என்று பொருள்.[1] இந்த பதங்கள் தேவனுடைய தூதர்களுக்கும் (ஆதியாகமம் 32:1), பிசாசின் தூதர்களுக்கும் (மத்தேயு 25:41), "கர்த்தருடைய தூதனுக்கும்" பயன்படுத்தப்படுகின்றன (பெரும்பாலான இடங்களிலே, தேவன் தாமே, தம்மை வெளிப்படுத்துகிறார்; யாத்திராகமம் 3:2). இதே வார்த்தைகள் தூது செல்லும் மனிதர்களுக்கும் ஆவிக்குரிய முன் நடத்தும் தலைவர்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது (ஏசாயா 42:19; ஆகாய் 1:13; மல்கியா 3:1; மத்தேயு 11:10).*

## தேவ தூதர்களின்
## குணாதிசயங்கள் என்ன?

*தேவதூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்.* அவர்கள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் (காண்க நெகேமியா 9:6; சங்கீதம் 148:2-5; கொலோசெயர் 1:16). ஆதலால், அவர்கள் தேவனுக்கு சமமானவர்களோ ஆராதிக்கப்பட வேண்டியவர்களோ அல்ல (கொலோசெயர் 2:18; வெளிப்படுத்தின விசேஷம் 19:10; 22:9)!

*தேவ தூதர்கள் சுய விருப்பமுள்ளவர்கள்.* பொதுவாக அவர்கள் பரலோகத்தில் தேவனுக்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிபவர்கள் என அறியப்பட்டவர்கள் (மத்தேயு 6:10 ஐக் காண்க), ஆனால் அவர்கள் சுய விருப்பமுடையவர்கள் என்பதற்கு அவர்களில் சிலர் தேவனுக்குக் கீழ்ப்படியாமையைத் தெரிந்து கொண்டு கிருபையிலிருந்து விழுந்து போனார்கள் என்கிற உண்மையே ஆதாரம் (2 பேதுரு 2:4; யூதா 6).

*தேவதூதர்கள் ஆவியாய் இருப்பவர்கள்.* தேவ தூதர்கள் மாற்றம் பெறக் கூடியவர்கள் (எபிரேயர் 1:7, 14); அவர்கள் மனித ரூபத்தைப் பெற்றுக் கொள்ளும் ஆவிக்குரிய ஜீவிகள். ஆவிக்குரிய ஜீவிகளாய் அவர்கள் இருப்பதால், மாமிச சரீரம் அவர்களுக்கு இல்லை (லூக்கா 24:39). ஆதலால் மனிதப் பார்வைக்கு சாதாரணமாகக் காணக் கூடாதவர்கள் (காண்க 2 இராஜாக்கள் 6:17; லூக்கா 2:13). "உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை," என்றும் மனுஷர்கள் "பரலோகத்திலே தேவ தூதரைப்போல் இருப்பார்கள் என்றும்" இயேசு சொன்னார் (மத்தேயு 22:30). எல்லாவற்றையும் சிருஷ்டித்த வார்த்தையானது எப்படி மனித அவதாரம் எடுத்து வந்ததோ அல்லது மாம்சமாகியதோ (யோவான் 1:1, 14), அதேபோல திருமறை நாட்களில் இந்த ஆவிக்குரிய ஜீவிகள் வித்தியாசப்பட்ட நிகழ்ச்சிகளிலே மனித ரூபத்தில் தோன்றினார்கள் (உதாரணத்திற்கு இவைகளைக் காண்க ஆதியாகமம் 19:1, 16; லூக்கா 24:4; நடபடிகள் 1:10).

*தேவ தூதர்கள் எண்ணிறைந்த கூட்டம்.* தேவன் தமது கட்டளைகளை நிறைவேற்ற அநேக தூதர்களைக் கொண்டுள்ளார். எபிரெயர் 12:22ல் அவர்கள் "பதினாயிரக் கணக்கானவர்கள்" என்று காட்டுகிறது. இயேசு தாம் சிலுவையில் மரிப்பதைத் தவிர்க்க உதவும் படியாக "பன்னிரெண்டு லேகியோன்"[2] தூதர்களை அழைப்பிக்க முடியும் என்று சொன்னார் (மத்தேயு 26:53); யோவான், "நான் பார்த்தபோது, சிங்காசனத்தைச் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன் ... ; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது" (வெளிப்படுத்தின விசேஷம் 5:11[3]) என்றார்.

*தேவ தூதர்கள் அளவிடப் பட்டவர்கள்.* தேவ தூதர்கள் பலமிகுந்த ஜீவிகளாயிருந்த போதிலும் (சங்கீதம் 103:20), அவர்களுக்கு தெய்வீகத்தன்மை இல்லை. ஒரே நேரத்தில் பல இடங்களிலும் வியாபித்திருக்கும் தேவனைப் போல் அவர்கள் இல்லாமல், தேவ தூதர்கள் இடம் விட்டு மாறிக் கொண்டே இருப்பவர்கள் (லூக்கா 1:26; தானியேல் 10:12-14). தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார், இயேசுவின் வருகையை தேவ தூதர்களும் அறியார்கள் என்றார் (மத்தேயு 24:36). தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்து தேவ தூதர்கள் முழுமையாய் அறிந்திருக்கவில்லை என்று பேதுரு குறிப்பிட்டார் (1 பேதுரு 1:10-12).

*தேவ தூதர்கள் அதிகார ரீதியில் படிநிலைகளின் ஒரு பகுதியினர்.* அவர்கள் (அளவிடப்பட இயலாத அளவுக்கு மகத்தான) தேவனுக்குக் கீழானவர்கள் தேவனுடைய குமாரனுக்கும் கீழானவர்கள் (எபிரெயர் 1:4-13), ஆனால் மனுஷனைக் காட்டிலும் மேலானவர்கள் (எபிரெயர் 2:9). மேலும், தேவ தூதர்களுக்குள் அதிகார ரீதியில் படிகள் இருப்பதை திருமறை சுட்டிக் காட்டுகிறது. புதிய ஏற்பாடு பிரதான தூதனைப் பற்றிப் பேசுகிறது (1 தெசலோனிக்கேயர் 4:16), இது, "தலைமைத் தூதன்" எனலாம். மிகாவேல் பிரதான தூதனாகப் பெயரிடப் பட்டவர் (யூதா 9; மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 12:7யும் காண்க). மிகாவேல் கூடுதலாக "பிரதான அதிபதி" என்றும், "அதிபதி" என்றும் "பெரிய அதிபதி" என்றும் அழைக்கப் படுகிறார் (தானியேல் 10:13, 21; 12:1), காபிரியேல் எனும் தூதன் தேவன் தமது செய்தியைக் கொண்டு போய் மனிதனிடம் கொடுக்கும்படி அனுப்பப்படும் தூதன் (தானியேல் 8:16; 9:21; லூக்கா 1:19, 26). இந்த இரண்டு தூதர்களும்தான் தூதர்களில்

*பெரியவர்களாக இருப்பது தெளிவாகிறது.*[4] *சேரூபீம் (ஆதியாகமம் 3:24)*[5] *மற்றும் சேராபீம் (ஏசாயா 6:2, 3) ஆகிய இரண்டும் தூதர்களின் இரண்டு வகைகள் எனக் காணப்படுகிறது.*

## தேவ தூதர்கள் செய்வது என்ன?

தேவனிடத்திலும் மனுஷரிடத்திலும் தேவ தூதர்களுக்கென சில பொறுப்புகள் உள்ளன. அவர்களின் இந்தக் கடமைகளை தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என்பது முக்கியமானது.

*தேவனிடத்தில் அவர்களுக்குள்ள உறவு முறை.* தேவ தூதர்கள் கர்த்தரைத் தொழுதுகொள்கிறார்கள். அவர்கள் அவருடைய ஊழியர்களும் அவருடைய செய்தியாளர்களுமாவர். அவர்கள் தேவனுடைய சித்தத்தை மனிதர்களிடத்தில் வெளிப்படுத்தி அந்த சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள் என்பதை உறுதி செய்கின்றனர். சில வேளைகளில் இரட்சிப்பில் அவர்கள் கருவிகளாயிருக்கிறார்கள். தேவனுடைய மக்களை அவர்கள் பாதுகாத்து சிறையிலிருந்து விடுதலையாக்கி வெளியே கொண்டு வந்தது போல விடுதலையாக்குகின்றனர் (நடபடிகள் 5:18, 19அ; மேலும் யாத்திராகமம் 14:19, 20; 2 இராஜாக்கள் 6:15-17ஐக் காண்க). தேவனுடைய சத்துருக்களை அழித்து அவருடைய மக்களை தண்டித்தது போல அவர்கள் பழிவாங்கும் காரியங்களையும் நிறைவேற்றுகின்றனர் (உதாரணமாகக் காண்க, 2 இராஜாக்கள் 19:35; 2 சாமுவேல் 24:16). தேவனுடைய ஊழியர்களாக, அவருடைய சேனையாக உருவாகி அவர்கள் "வானசேனை" என்று அழைக்கப்படுகின்றனர் (நெகேமியா 9:6; சங்கீதம் 148:2 யும் காண்க).

*மனுஷரிடத்தில் அவர்களுக்குள்ள உறவு முறை.* தேவனுடைய செய்தியை மனுஷர்களுக்கு கொடுப்பது, தேவனுடைய பிரதிநிதிகளாய் செயல்பட்டு பாதுகாப்பு அளிப்பது அல்லது அழிப்பது, ஆகியவற்றோடு பல வகைகளிலும் தேவதூதர்கள் ஜனங்களுக்கு உதவிகரமாய் இருக்கிறார்கள்.

(1) தேவதூதர்கள் மனிதர்களை காவல் காத்து பாதுகாக்கின்றனர். ஜனங்களைப் பாதுகாப்பதில் எப்பொழுதுமே தேவதூதர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றியுள்ளனர். சங்கீதம் 91:11, 12ல், "உன் வழிகளிலெல்லாம் உன்னைத் தாங்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கரங்களில் ஏந்திக் கொண்டு போவார்கள்" என்று சொல்லுகிறது. தேவதூதர்கள் இந்தக் கடமையை எப்படி நிறைவேற்றுகின்றனர் என்று குறிப்பிடப்படவில்லை. ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு தூதனை நியமனம் செய்து காவல் காக்கவும் துன்பங்கள் வராமல் பாதுகாத்துக் கொள்வதாகவும் சிலர் கூறுகின்றனர்.

இந்த பாதுகாப்புத் தூதர்களைக் குறித்து இரண்டு புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் சுட்டிக் காட்டுவதாக நினைக்கின்றனர். மத்தேயு 18:10ல் "அவர்களுக்குரிய தூதன்" என்று குறிப்பிடுகிறது: "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரம பிதாவின் சமூகத்திலே எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று குறிப்பிடப்படுகிறது. இதே போன்ற ஒரு வசனச் சொற்றொடர் கொண்ட ஒரு பகுதி நடபடிகள் 12:15ல் காணுகிறது. அங்கே - பேதுரு சிறையிலிருந்து

வெளியே கொண்டுவரப்பட்ட பிறகு - ஜெபித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்கள் கதவண்டையில் நின்று கொண்டிருப்பது அவர்தானா என்ற சந்தேகம் வந்தது, அப்பொழுது "அவர்கள்: 'அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள்.' " இந்த வசனப்பகுதிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு பாதுகாப்புத் தூதனைக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது, ஆகிலும் இந்த உபதேசத்தை அவைகள் தெளிவாய் போதிப்பதில்லை.

ஒருவேளை திருமறை ஆதாரமாக சிறப்பான விளக்கம் கொடுக்க வேண்டுமானால் தேவ தூதர்கள் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு ஒரு பொதுவான காவலர்கள் எனலாம். ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கும் அவ்வப்பொழுது உதவிசெய்யலாம், ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட தேவதூதன் நியமிக்கப்பட்டிருப்பதாக திருமறை குறிப்பிடுவதில்லை. காவல் காக்கும் தூதர்கள் நியமிக்கப் பட்டிருப்பதை நம்பாமலேயே, தேவனுடைய ஜனங்களுக்கு தீமைகள் வராதபடிக்கு பாதுகாப்பதில் தேவதூதர்கள் உதவுகின்றனர் என நாம் விசுவாசிக்கலாம்.

> ஒரு ஆபத்திலிருந்து உடனடியாக விடுதலையாக்கப்படுவோமாகில்,தேவன் தமது தூதனை அனுப்பி நம்மை காப்பாற்றியிருக்கக் கூடும் என்று ஐயம் தோன்றினால் நாம் நன்றியுள்ளவர்களாயிருப்போம் ...
>
> ஒரு கார் நம்மீது மோதுவதுபோல் வந்து திசை மாறிப் போகுமானால், சீறி வரும் ஆற்றுத் தண்ணீரில் அடித்துக் கொண்டுபோகப் படாமல் திடீரென காலூன்றி நிற்கும் போது, அயலாரின் வழியில் காயமின்றி நடக்கும்போது, தேவன் தாம் தமது தூதர்களை அனுப்பி பாதுகாக்கிறாரோ என்கிற சந்தேகம் நமக்கு வராதா? ... அப்படிப்பட்ட நேரங்களில் தமது தூதர்களை அனுப்பி பாதுககாக்கிற தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டுமல் லவா? அப்படி நாம் செய்வது நலமென்றே தோன்றுகிறது.[6]

*(2)* தேவ தூதர்கள் மனித வர்க்கத்துக்கு பணிவிடை செய்கிறார்கள். ஜனங்களுக்கு தேவ தூதர்கள் இன்று செய்யும் காரியம் என்ன என்பதை வெளிப்படுத்திக் காட்டுகிற சிறந்த வசனப்பகுதி எபிரெயர் 1:14, இதில், "இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்கள் நிமித்தமாக ஊழியம் செய்யும் படிக்கு அவர்களெல்லாரும் [தேவ தூதர்கள்], அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" என்று சொல்லப்படுகிறது. தேவ தூதர்கள் ஊழியம் செய்யும் "பணிவிடை ஆவிகள்." யார் நிமித்தம் அவர்கள் ஊழியம் அல்லது பணிவிடை செய்கிறார்கள்? "இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களின் நிமித்தம்." யார் அவர்கள்? கிறிஸ்தவர்கள்! ஆதலால், தேவனுடைய பிள்ளைகளின் சார்பாக தேவ தூதர்கள் பணிவிடை செய்கிறவர்கள். எப்படி? அவர்கள் என்ன செய்கிறார்கள்? ஏவப்பட்ட எழுத்தாளர்கள் அப்படிச் சொல்லாவிட்டாலும், கிறிஸ்துவின் சீஷர்களின் நிமித்தமாக தேவனுடைய வானசேனை ஊழியம் செய்வதை அறிந்து ஆறுதல் அடையலாம்!

*(3)* மனிதருடைய இரட்சிப்பில் தேவ தூதர்கள் ஆர்வமுடையோராயிருக்கிறார்கள். உண்மையுள்ள ஊழியர்களாக, அவர்கள் அதிகமாக தேவன் விரும்புகின்ற காரியங்களை மறைவாக இருந்து செயல்படுகின்றனர்: மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காக செயல்படுகின்றனர்.

தேவனுடைய மீட்பின் திட்டம் எப்படி செயல்படுகிறது என்பதைக்காண, யுகங்களினுடே ஆசையாய் இருந்தார்கள் (1 பேதுரு 1:10-12). கிறிஸ்துவை அறிக்கை செய்கிறவர்களின் நாமங்களை தேவதூதர்கள் முன்பாக அறிக்கை செய்வதாக இயேசு குறிப்பிட்டார் (லூக்கா 12:8). ஒரு பாவியின் மனந்திரும்புதல் தேவதூதர்களுக்கு முன்பாக மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் (லூக்கா 15:10).

சபையின் குழந்தைகால பிராயத்தில் தனிப்பட்ட ஒரு சிலருடைய இரட்சிப்பில் தேவ தூதர்கள் உட்படுத்தப் பட்டனர் (நடபடிகள் 8:26; 10:3-7). ஆயினும், தேவதூதர்கள் தாமே ஒருபோதும் மனுஷர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கவில்லை. அப்போஸ்தலர் நடபடிகள் 8ம் மற்றும் நடபடிகள் 10ம் அதிகாரத்தில் ஒரு தேவதூதன் கொர்நெலியுவினிடத்தில் ஆள் அனுப்பி பேதுரு வந்து தங்களுக்கு பிரசங்கிக்கும்படி செய்யச் சொல்லுகிறான், இதன் விளக்கம் சுவிசேஷத்தின் “பொக்கிஷம்” “மண்பாண்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது” என்று வாசிக்கிறோம் (2 கொரிந்தியர் 4:7). மக்கள் இன்று இரட்சிக்கப்பட, தேவ தூதர்களல்ல - மற்ற மனுஷர்கள் - அவர்களுக்கு தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்க வேண்டும்.

தேவ தூதர்களால் செய்ய முடியாதவைகள் எவை என்பதை அறிந்து கொண்டிருப்பதும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதில் ஒரு பகுதியை அறிந்து கொள்ளுதலாகும். தேவதூதர் இன்று செய்யமுடியாத காரியங்களில் ஒன்று இன்று அவர்கள் மனித ரூபத்தில் தோற்றமளிக்க முடியாது. எபிரெயர் 13:2 ஐ சுட்டிக் காட்டி, அநேகர் இன்றும் அவர்கள் (தூதர்கள்) தோன்றுகின்றனர் என்கின்றனர்: “அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு.” இந்த வசனப் பகுதி தேவ தூதர்கள் இன்றும் மனித வடிவத்தில் உலாவுவதாக கூறுவதில்லை. மாறாக, தேவனிடத்திலிருந்து வந்த புதிய நபர்களுக்கு ஆபிரகாம் அளித்த உபசரிப்பை உதாரணமாக இங்கு காட்டுகிறார் (ஆதியாகமம் 18:1-8). இது உபசரிப்பை ஊக்கப்படுத்தும்படி சொல்லப்பட்டது. ‘‘இன்று’’ ஜனங்கள் அறியாமல் ‘‘தேவதூதர்களை உபசரிக்க முடியும்’’ என்று இது போதிப்பதில்லை. தேவன் தமது சித்தத்தை உயிரோடிருக்கும் அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக எப்படி இனியும் வெளிப்படுத்துவதில்லையோ அப்படியே தேவதூதர்களை அவர் இன்று மனித ரூபத்தில் அனுப்புவதில்லை. தேவதூதர்கள் தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே மத்தியஸ்தர்களாக இன்று பணிவிடை செய்வதுமில்லை, ஏனெனில் இயேசு கிறிஸ்துவே இன்று நம்முடைய ஒரே மத்தியஸ்தர் (1 தீமோத்தேயு 2:5).

## தேவ தூதர்களைக் குறித்து நாம் செய்ய வேண்டுவது என்ன?

தேவ தூதர்கள் அளிக்கும் எல்லா பலன்களையும் பெற ஒருவர் கிறிஸ்துவினிடத்தில் திரும்பி இரட்சிக்கப்பட வேண்டியதே அவர் செய்ய வேண்டிய எல்லாமுமாகும். ஒருவர் இரட்சிக்கப்படும்போது, தேவ தூதர்களிடத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கிறது. நாம் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாக வாழ்வோமானால், தேவதூதர்கள் தேவனுடைய சித்தத்தை செய்து நம்மைக் கவனித்துக் கொண்டுள்ளார்கள் என்றும் நமது நிமித்தம்

*அவர்கள் ஊழியம் செய்கிறார்கள் என்றும் நாம் உறுதிபடுத்திக் கொள்ளலாம்.*

*தேவ தூதர்களைக் குறித்து அநேக எச்சரிப்புக்கள் அவசியமானது. நாம் அவர்களுக்கு ஆராதனை செய்வதோ அவர்களிடத்தில் ஜெபிப்பதோ கூடாது. தங்களை "தேவனுடைய தூதர்கள்" என்றும் அல்லது தேவனிடத்திலிருந்து செய்தி கொண்டுவந்த தூதர்கள் என்றும் பொய்யாய் நடிப்பவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து நம்மை நாமே தவறான வழிக்கு நடத்தப்பட அனுமதிக்கக் கூடாது. பவுல், "... வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்" என்று சொன்னார் (கலாத்தியர் 1:8)! ஒவ்வொரு செய்தியையும் வேத வசனங்களோடு ஒப்பிட்டு சரி பார்க்கும்படி தேவன் நம்மிடத்தில் எதிர் பார்க்கிறார். முரண்பாடான எந்த உபதேசமும் - அது ஒரு தூதனிடத்திலிருந்து வந்திருந்தாலும் - புறக்கணிக்கப்பட வேண்டும்.*

## *முடிவுரை*

*தேவ தூதர்களைக் குறித்த கருத்து சினிமாக்களிலோ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலோ காட்டப்படும் நபர்களை நமது மனதுக்குக் கொண்டு வரக் கூடும். தேவதூதர்கள் மார்க்க சம்பந்தப்பட்ட கதைகளோடு இணைந்தவர்களாக உருவகப்படுத்தியிருப்பதாக நாம் நினைக்கலாம். இப்படிப்பட்ட ரீதியில் வெளிப்படுத்தப்படும் தேவ தூதர்களைக் குறித்த காட்சி நம்மைப் பொழுது போக்கச் செய்திருக்கக் கூடும், ஆனால் வேதபுத்தகத்தின் உண்மைகளை இந்த பிரசித்தமான கட்டுக்கதைகளோடு ஒப்பிட்டு தவறு செய்து விடக் கூடாது. தேவ தூதர்களின் குணாதிசயங்களையோ செயல்பாடுகளையோ குறித்து வேதம் குறிப்பிடாத பட்சத்தில் நாமாக எதையும் கருத்து தெரிவிக்காமல் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.*

*வேத வசனம் தேவ தூதர்களைக் குறித்து போதிப்பவைகளை நாம் விசுவாசிக்க வேண்டும். தேவ தூதர்கள் இருக்கிறார்கள் என்றும் நம்மை பாதுகாக்க அவர்கள் உதவுகிறார்கள் என்றும் நமது நிமித்தம் அவர்கள் ஊழியம் செய்கிறார்கள் என்றும் நாம் அறியும் போது நமக்குத் தேவையான ஆறுதலை அது கொடுக்கக் கூடும். நம் பக்கத்தில் சர்வ வல்ல தேவனையும், நித்திய வசனங்களையும், பரிசுத்த ஆவியானவரையும், "பதினாயிரங்களான" தேவ தூதர்களையும் கொண்டுள்ளோம்!*

---

*குறிப்புகள்*

*[1]"தேவதூதர்களுக்கு திருமறையில் சில வேளைகளில் வேறு பதங்கள் பயன்படுத்தப்படுகிறது, அவை 'தேவபுத்திரர்' (யோபு 1:6; 2:1), 'பரிசுத்தவான்கள்' (சங்கீதம் 89:5, 7), 'ஆவிகள்' (எபிரெயர் 1:14), 'காவலன்' (தானியேல் 4:13, 17, 23), 'சிங்காசனங்கள்,' 'கர்த்தத்துவங்கள்,' 'துரைத்தனங்கள்,' 'அதிகாரங்கள்' (கொலோசெயர் 1:16), மற்றும் 'வல்லமைகள்' (எபேசியர் 1:21)" (வெயின் க்ருடம், "தேவதூதர்கள்" முனைப்படுத்தப்பட்ட இறையியல் [கிரேண்ட் ரேபிட்ஸ், மிச்சிகன்: ஸோண்டர்வான் வெளியீட்டு ஹவுஸ், 1994], 397). [2]ஒரு லேகியோன் என்பது ஆறாயிரம் வீரர்களைக் கொண்டது. [3]காண்க உபாகமம் 33:2; சங்கீதம் 68:17; தானியேல் 7:10. [4]"காபிரியேல் தூதன் மனுஷர்களுக்கு தேவ தூதர்கள் செய்யும் ஊழியத்திற்கு முகவர்கள் போன்றவர்கள்,*

*ஆகிலும் மிகாவேல் தூதன்தான் மனிதர்களின் நாயகனாக சாத்தானுடன் அவர்களுக்குள்ள யூத்தத்தில் விளங்குகிறான் ... யூதர்கள் மிகாவேலை பிரதான தூதர்களுக்குத்தலைவன் என்ற கருத்துடையவர்களாயிருந்தனர்"* (William Smith, "Michael," *The New Smith's Bible Dictionary,* rev. Reuel G. Lemmons [Garden City, New York: Doubleday & Co., 1966], 240). [5]*கேரூபீன்கள் என்றழைக்கப்படும் தேவதூதர்களை ஒத்த இரண்டு உருவங்களை உடன்படிக்கை பெட்டியின்மீதும் திரைச் சீலையில் அந்த உருவங்களை பின்னியும் வைக்கப்பட்டிருந்தது (யாத்திராகமம் 25:18-22; 26:1; எண்ணாகமம் 7:89; 1 சாமுவேல் 4:4; 1 இராஜாக்கள் 6:23-28; 8:7).* [6]Grudem, 406.